திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நபார்டு வங்கித் திட்டத்தின்மூலமாக இந்த வருடமே பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 387, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

387—

நெல் சேமிப்புக் கிடங்கு

***2913—திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, மாமண்டூரில் நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுராந்தகத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான 6,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் நவீன முறைப்படி கட்டப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்கு இயங்கி வருகிறது. இது மாமண்டூருக்கு அருகில் சுமார் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்தக்கூடிய தனியார், அரசு மற்றும் கூட்டுறவு சரக்கு வைப்பாளர்கள் மாமண்டூர் பகுதியில் குறைவாக இருப்பதால் தனியாக நெல் சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியைப் பெற்றுத் தந்த காவியமே, வீரத்தின்*

விடிவெள்ளியே, விவசாய மக்களின் விடிவிளக்கே, நாளைய இந்தியாவைக் காக்கும் எங்கள் இதய தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) நாடு செழிக்க நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை வாரி வழங்கும் நமது இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகம் தொகுதி கடைசி தொகுதி. அந்தத் தொகுதியில் இருக்கிற அனைத்து மக்களும் விவசாயத்தைச் சார்ந்தவர்கள். அதனால் அப்பகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மாமண்டூரில் ஒரு நெல் சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தருவார்களா என்பதைப் பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகத்தில்தான் 6,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு ஒன்று தற்பொழுது இயங்கி வருகிறது. மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு கிடங்கைக் கட்டுவதற்கு ஆணையிட்டு, அந்தக் கிடங்கு கட்டும் பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் 3 மாத காலத்தில் அந்தக் கிடங்கும் பயன்பாட்டுக்கு வரும். எனவே, அதனை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிடங்கு கட்டுவதற்காக நான் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் கொடுத்திருக்கிறேன். அது அந்த நிதியில் கட்டப்படுகிறதா அல்லது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் தனியாக நிதி கொடுத்திருக்கிறாரா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில், வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகில் ஒரு சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு 25,000 ஹெக்டேர் நிலம் இருக்கின்றது. அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் 25,000 ஹெக்டேர் நிலப்பரப்பு இருக்கின்ற காரணத்தால் அப்பகுதியில் விவசாய மக்களுக்காக நெல் சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்காகக் நிதி கொடுத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் சொன்ன கிடங்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கிடங்கும் வெவ்வேறு. நம்முடைய தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின்மூலம் மட்டுமே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, மதுராந்தகத்திலே அதே வளாகத்தில் 6 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கை இன்னும் 5 ஆயிரம் டன் அதிகப்படுத்தி, கூடுதலாக 5 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குக்கான கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றுதான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

முற்பகல் 10—45

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சரப்பாக்கத்தில் ஒரு கிடங்கு கட்டித் தரப்படுமா என்று இங்கே ஒரு வினா எழுப்பியிருக்கிறார்கள். இந்தியாவின் முதன்மைத் தொழிலான விவசாயத்திற்கு, விவசாயத்தை மேற்கொள்கிற உழவர்களுக்கு ஒரு பாதுகாப்பை, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்கிற மிகப் பெரிய திட்டத்தை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) உழவனை கருவறையிலிருந்து கடைசி நாள்வரை பாதுகாக்கிற திட்டங்களையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிற தலைவி

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்த அச்சரப்பாக்கம் பகுதியிலேயும் இடம் இருக்குமேயானால், அந்த இடத்தைப் பரிசீலித்து தேர்வு செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று நிச்சயமாக அவருடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 388, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

388—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***17742**—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இரண்டாம் வெண்மை புரட்சியை உருவாக்கிட, ஒவ்வொரு ஆண்டும் 1,500 புதிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கவும், அதில் மகளிர் சங்கங்கள் அமைக்க முன்னுரிமை வழங்கியும் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின்